[1986 நவம்பர் 19

வரத்து கழகங்கள் நிச்சயமாக அந்த டயர் போன்ற பொருள்களை டான்சி நிறுவனத்திடம் இருந்து வாங்கும் என்ற உறுதியைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே ஒரு அரசு நிறுவனம் தயாரிக்கிறது என்கிறபோது கட்டாயமாக அதை வாங்கவேண்டும் என்ற நிலையை நிச்சயமாக போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொள்ளும் என்பதிலே எந்தவித மான கருத்து வேறுபாடும் வேண்டாம். ஆனால் மற்ற டயர் களோடு தரத்திலேயும் விலையிலேயும் சரியாக போட்டியிட அவர்கள் தயாராக இருப்பார்களேயானால் நிச்சயமாக இதில் எந்தவித மாறுபாடும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி யில்லாமல், விலை அதிகமாக இருக்கிற நிலையும், தரம் குறைவாக இருக்கிற நிலையும் ஏற்பட்டால், அது போக்குவரத்துக் கழகத் திற்கு நட்டத்தை ஏற்படுத்தும். எனவே இவைகளையெல்லாம் செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நோக்கத்தை வைத்துத் தான் நான் ஏற்கனவே சொன்னேன். எனவே அரசு சார்பாக இருக்கிற எல்லாவற்றிற்குமே முக்கியத்துவமும், முன் உரிமையும் ஒவ்வொரு அரசுத் துறையும் கொடுக்கிறது.

கல்பாக்கத்தில் யுரேனியத்திலிருந்து மின் உற்பத்தி

88—(*வினா எண் 5030) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த கல்பாக்கத்தில் யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சி 'Fast Breeder Reactor' நடத்தப்படுவது குறித்த தகவல் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அணு மின் நிலை யங்களில் உபயோகப்படுத்தப்படும் எரிபொருள்களான யுரேனியம் மற்றும் தோரியம் இவற்றை எவ்வாறு சிறந்த முறையில் பயன் படுத்தலாம் என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய அதிவேக சோதனை அணு உலை (Fast Breeder Test Reactor) 18-10-85 முதல் கல்பாக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18-10-1985 முதல் யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்று ஆராய்ச்சி நடந்து வருவதாகச் சொன் னார்கள். அந்த ஆராய்ச்சி எப்போது முடிவு அடைகிறது? தமிழகத்தில் அதைப் பயன்படுத்தி அணு மின் நிலையம்

1986 மார்ச் 19]

உருவாக்குகிற செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? அப்படி உருவாக்குகிறபோது வெளிநாட்டு உதவி ஏதேனும் நாடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த 'பாஸ்ட் பிரீடர் டெஸ்ட் ரியாக்டர்' சோதனை நிலையத்திற்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் பெயரிடப்பட்டிருக்கிறது. இதிலே ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படும். இது ஆசியாவிலேயே மிகப் பெரிய கவுரவமான, பெருமைக்குரிய பரிசோதனை நிலையமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னொரு அணு மின் நிலையம் கூடங்குளத்தில் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நாகப்பட்டினத்தில் ஒரு அனல் மின் நிலையம் உருவாக்கிட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கிற அணு மின் நிலையம் ஒன்று அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக தஞ்சையில் உருவாக்கிட தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் கரியை உபயோகப்படுத்தி ஒரு மின் நிலையம் ஏற்படுத்த அரசு ஆய்வு செய்து வருகிறது. அணு மின் நிலையம் அங்கே நடத்துவதற்கு ஆய்வு இல்லை.

வில்லிவாக்கம் தொகுதியில் மின் விளக்குகள்

89—(*வினா எண் 5205) திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதியில் பல இடங்களில் மின் துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் இணைந்து செயல்படாமையால் தெரு விளக்குகள் எரிவதே இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.